# கேள்வி அறிவித்தல்
# கட்டடங்கள் திணைக்களம்
# கிழக்கு மாகாணம்

01 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் **(CIDA) கட்டடங்கள் நிர்மாணத்திற்கு** பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தையுடைய கேள்விதாரரிடமிருந்து **திணைக்கள பெறுகைக்குழுத்தலைவரினால்** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன்.

02 தகுதியுடைய கேள்விதாரர்கள் **கிழக்கு மாகாண பிராந்தியத்தைச்** சேர்ந்தவர்களாக இருப்பதுடன், அவர்களது **பதிவு, முகவரி கிழக்கு மாகாணத்துக்குள்** இருத்தல் வேண்டும்.

03 மீளளிக்கப்படாத கட்டணமாகிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை அட்டவணையில் குறிப்பிட்ட பிராந்தியத்துக்குரிய **கட்டடங்கள் திணைக்கள, பிரதம எந்திரி அலுவலகத்தில்** செலுத்தி, பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை குறிப்பிட்ட பிராந்திய **கட்டடங்கள் திணைக்கள,நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில்** சமர்ப்பிக்குமிடத்து **27.06.2017 பிற்பகல் 03.00** மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

04 பெறுகைமுறையானது **தேசிய போட்டி விலைக்கேள்வி,** ஒருகட்ட ஒருகடிதவுறை முறைமையாகும்.

05 கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஆவணங்கள் இரு பிரதிகளில் மட்டுமே விநியோகிக்கப்படும். தகுதியான கேள்விதாரர்கள் கேள்வி பத்திரங்களை இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை **அவ்வப் பிராந்திய கட்டடங்கள் திணைக்கள, நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில்** பெற்றுக்கொள்ளலாம்

06 கீழே தரப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப் பிணைகள் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு **தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், உட்துறைமுகவீதி, திருகோணமலை** என்ற முகவரிக்கு **28.06.2017, பிற்பகல் 02.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், உட்துறைமுகவீதி, திருகோணமலையில்** உடனடியாகத் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

07 முன்கேள்விக் கூட்டம் **19.06.2017** மு.ப **10.00** மணிக்கு **குறிப்பிட்ட பிராந்திய, கட்டடங்கள் திணைக்கள, பிரதம எந்திரி அலுவலகத்தில்** இடம் பெறும்.

08 பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

<u>**அட்டவணை**</u>

| வேலைகளின் விபரம் | CIDA தரம் (கட்டடங்கள்) | மதீப்பீட்டுத் தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | கேள்வி செல்லுபடி யாகும் காலம் | பிராந்திய அலுவலகம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை (ரூபா) | காலம் |
| கல்முனை மாவட்டம், பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் பற்சிகிச்சை மருந்துவமனை உட்பட மருந்துவமனை தொகுதியை மேம்படுத்தல் | C 7ம் அதற்கு மேற்பட்டதும் | 8,654,351.01 | 03 மாதங்கள் | 4,000.00 | 77 நாட்கள் | கல்முனை தொ.பே.இல 067 - 2229153 | 87,000.00 | 105 நாட்கள் |
| மட்டக்களப்பு மாவட்டம், திராய்மடுவில் பாதுகாப்பு இல்லம் நிர்மாணித்தல் | C6ம் அதற்கு மேற்பட்டதும் | 12,947,965.79 | 05 மாதங்கள் | 5,000.00 | 77 நாட்கள் | மட்டக்களப்பு தொ.பே.இல 065-2222910 | 130,000.00 | 105 நாட்கள் |
| மட்டக்களப்பு மாவட்டம், திராய்மடு மகாண சுகாதார பயிற்சி நிலையத்தில் பெண் விடுதிகள் நிர்மாணித்தல் | C6 ம் அதற்கு மேற்பட்டதும் | 15,540,728.67 | 05 மாதங்கள் | 7,000.00 | 77 நாட்கள் | மட்டக்களப்பு தொ.பே.இல 065-2222910 | 156,000.00 | 105 நாட்கள் |
| மட்டக்களப்பு மாவட்டம், திராய்மடு மகாண சுகாதார பயிற்சி நிலையத்தில் ஆண் விடுதிகள் நிர்மாணித்தல் | C6 ம் அதற்கு மேற்பட்டதும் | 15,540,728.67 | 05 மாதங்கள் | 7,000.00 | 77 நாட்கள் | மட்டக்களப்பு தொ.பே.இல 065-2222910 | 156,000.00 | 105 நாட்கள் |


மாகாணப்பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2222630
திகதி: 2017.06.06

எந்திரி.க.சந்திரமோகன்
தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு.